உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# வேதாகம காலக்கணக்கு

## பற்றின ஆராய்ச்சி

பாடம் - 22



# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

## பாடம் : # 22

## வேதாகம காலக்கணக்கு பற்றின ஆராய்ச்சி

**உங்கள் கவனத்திற்கு : ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

இன்று நாம் வேதத்தில் தேவன் தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்த **"காலங்களை"** குறித்து காண்போம்.

இதற்கான ஆங்கில பதம்
**"க்ரோனாலஜி" (CHRONOLOGY)**
ஆகும். இந்த வார்த்தை இரண்டு பாகங்களை கொண்டுள்ளது.

முதல் பாகம் **"க்ரோனாஸ்" (CHRONOS)** – இதற்கு காலம் **(TIME)** என்று பொருள். நாம் பயன்படுத்தும் கைக்கடிகாரமானது, அறிவியல் பூர்வமாக, க்ரோனாமீட்டர் **(CHRONOMETER)** – அதாவது, காலத்தை அளக்கும் கருவி, என்று அழைக்கப்படுகிறது.

இரண்டாம்பாகம் **"லோகாஸ்" (LOGOS)** – இதற்கு ஆராய்தல் **(STUDY)** என்று பொருள்.

**இவ்விதமாக, க்ரோனாலஜி (CHRONOLOGY) என்பதற்கு, காலத்தை ஆராய்தல் (அ) காலத்தை கணக்கிடல் என்று பொருளாகும்.**

இந்த வேதாகம காலக்கணக்கு என்பது, மனிதனுடைய வரலாற்றில் உள்ள காலத்தை வேதத்தின்படி ஆராய்வதாகும்.




இன்று கிபி என்றழைக்கப்படும் காலத்தை கணக்கிடுகையில், 2000-த்திற்கும் மேலான வருடங்களில் நாம் வாழ்ந்துகொண்டிருப்பதை அறிவோம்.

ஆனால், **ஆதாமினுடைய சிருஷ்டிப்பிலிருந்து கிமு (கிறிஸ்துவுக்கு முன்) என்றழைக்கப்படும் வருடம் வரை** எத்தனை வருடங்கள் கடந்திருக்கிறது என்று **நாம் அறிந்திருக்கிறோமா ?**

**மேலும், இந்த பூமியின் மேல் மனிதனுடைய வரலாற்றில் எவ்வளவு வருடங்கள் கடந்திருக்கிறது என்று தெரியுமா ?**

இதை குறித்து விஞ்ஞானிகள் வேறுப்பட்ட கருத்துக்களை முன் வைக்கிறார்கள். சிலர் பல ஆயிர வருடங்கள் என்றும், வேறு சிலர் அது நூறு ஆயிர (லட்சங்கள்) வருடங்கள் என்றும் சொல்கிறார்கள்.

**ஆனால், உண்மையான எண்ணிக்கைதான் என்ன ?**

**இதை நமது வேதாகமம் வெளிப்படுத்துகிறதா ?**

ஆம், தெய்வீக கொள்கையாகிய “இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும்” மூலம் கர்த்தருடைய புஸ்தகத்தில் “தேடும் பொழுது”, இதற்கான விடை **50 தொடர்புகளை கொண்ட (வசனங்கள்), 7 பாகங்களாக** சிதறியிருப்பதை நாம் காண்கிறோம்.

இப்பொழுது நாம் வேதாகம காலக்கணக்கு குறித்த ஆராய்ச்சியை துவங்குவோம்.

## பாகம் - 1

## ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டது முதல் ஜலப்பிரளயம் வரைக்கும்



இது தேவனுடைய தெய்வீக திட்டத்தில் உள்ள முதலாம் உலகத்தின் காலக் கட்டமாகும். இந்த கால கட்டத்தை குறித்த துல்லியமான கால அளவை, ஆதியாகமத்தில் உள்ள விநோதமான அதிகாரமாகிய ஐந்தாம் அதிகாரத்தில் தேவன் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

அநேகர் இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள வம்ச வரலாற்று விளக்கங்களை குறித்து ஆச்சரியப்படுகின்றனர். வேறு சிலரோ இந்த அதிகாரத்தை முற்றிலும் தேவையற்ற ஒன்று என கருதுகின்றனர்.

**ஆனால், இந்த அதிகாரம் மாத்திரம் வேதத்தில் கொடுக்கப்படாதிருந்தால் முதலாம் உலகமானது எவ்வளவு காலம் நீடித்திருந்தது என்று அறிந்துகொள்வது இயலாதிருந்திருக்கும்.**


அதாவது, ஆதாம் முதல் ஜலப்பிரளயம் வரையிலான கால அளவை நாம் அறிந்திருக்க முடியாது.

**சரி, இப்பொழுது அதை எவ்வாறு கணக்கிட வேண்டும் ?**

**ஒருவேளை, ஆதாமின் சந்ததியாகிய, சேத் துவங்கி குறிப்பிடப்பட்டிருக்கிற 10 நபர்களின் வயதை ஒட்டுமொத்தமாக எடுக்கலாமா ?**

அப்படி செய்வது ஒரு பெரிய கூட்டுத்தொகையை தரும், அது ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களின் பின்னிப்பிணைந்த வருடங்களை நமக்கு தரக்கூடும்.

**கீழ்க்கண்ட அட்டவணையில் இதை வலது புறம் காணலாம்.**




இது எதிர்பார்த்ததைவிட இரண்டு, மூன்று அல்லது பல மடங்கு பெரியதாகும்.

**உதாரணமாக,** ஆதாம் 325 வயதாயிருக்கும்போது அவருடைய கொள்ளுப் பேரனாகிய கானான் பிறந்தார்.

ஆனால், அவருடைய 325 வயதுவரையிலான காலகட்டத்தில் அவர் தன்னுடைய குமாரன் சேத்துடன் 195 வருடங்களும், பேரன்

ஏனோசுடன் 90 வருடங்களும் வாழ்ந்திருந்தார்.

இப்படி, ஒரு குறிப்பிட்ட சமயத்தில் இம்மூவருடைய வாழ்நாட்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கிறதை காண்கிறோம்.

ஆகையால், உண்மையான 325 வருட கால அளவிற்கு பதிலாக,

**இம்மூவருடைய வயதையும் கூட்டும் பொழுது –**

**325 (ஆதாம்) + 195 (சேத்) + 90 (ஏனோஸ்)**

**கூட்டுத்தொகையாக 610 வருடங்களை நாம் பெறுவோம்.**

**ஆனால், உண்மையில் கடந்து வந்த வருடங்கள் 325 வருடங்களேயாகும்.**

இதைபோன்ற சூழ்நிலையே, ஆதாம் முதல் நோவா வரையிலான 10 நபர்களின் வயதை கூட்டும் பொழுது உருவாகும்.

## இப்படியிருக்க, நாம் என்ன செய்ய வேண்டும் ?

நாம் செய்யவேண்டியது என்னவெனில், ஆதாம் முதல் நோவா வரையிலான ஒவ்வொருவரும் தன்னுடைய முதல் குமாரனை பெற்றெடுக்கும் வரையில் வாழ்ந்த வயதின் வருடங்களை மாத்திரம் கூட்ட வேண்டும்.

இதன் மூலம், **நோவாவினுடைய பிறப்பு வரையிலான ஒன்பது சந்ததிகளின்** சங்கிலித் தொடரை நாம் பெறுவோம்.

பின்பு, அந்த கூட்டுத்தொகையுடன் ஜலப்பிரளயத்தின் போது நோவா எட்டியிருந்த வயதை கூட்ட வேண்டும்.

அப்படி கூட்டினால், ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து ஜலப்பிரளயம் துவங்கின நாள் வரையிலான வருடங்களின் எண்ணிக்கையை நாம் பெறலாம்.

ஆம், இது மிகவும் சுலபமான காரியம்.

இவ்விதமாக, நாம் கணக்கிடுகையில் பின்வரும் விடையை பெறுகிறோம் –

| வேத வசனம் | வயது | முதல் பிறந்தவர்கள் |
|---|---|---|
| ஆதியாகமம் 5:3 ( ஆதாம் ) | 130 | சேத் |
| ஆதியாகமம் 5:6 ( சேத் ) | 105 | ஏனோஸ் |
| ஆதியாகமம் 5:9 ( ஏனோஸ் ) | 90 | கேனான் |
| ஆதியாகமம் 5:12 ( கேனான் ) | 70 | மகலாலெயேல் |
| ஆதியாகமம் 5:15 ( மகலாலெயேல் ) | 65 | யாரேத் |
| ஆதியாகமம் 5:18 ( யாரேத் ) | 162 | ஏனோக்கு |
| ஆதியாகமம் 5:21 ( ஏனோக்கு ) | 65 | மெத்துசலா |
| ஆதியாகமம் 5:25 ( மெத்துசாலா ) | 187 | லாமேக்கு |
| ஆதியாகமம் 5:28 ( லாமேக்கு ) | 182 | நோவா |
| ஆதியாகமம் 7:11 ( நோவா ) | 600+ | (ஜலப்பிரளயத்தின் போது அவருடைய வயது |
| மொத்தம் | 1656 | |



முதல் உலகத்தின் கால அளவு 1656 வருடங்கள்.

# பாகம் - 2

# ஜலப்பிரளயம் முதல் வாக்குத்தத்தம் வரைக்கும்



இது ஜலப்பிரளயம் துவங்கின நாள் முதல் “வாக்குத்தத்தம்” வரை செல்லக்கூடிய கால அளவு ஆகும்.

## இங்கு குறிப்பிடப்படுகிற வாக்குத்தத்தம் எது ?

ஒருவேளை, ஈசாக்கை மோரியா மலையில் பலியிடப் போனபொழுது தேவன் ஆபிரகாமிடம் செய்ததும். “ஆபிரகாமின் வாக்குத்தத்தம்” என்றழைக்கப்படுகிறதுமான வாக்குத்தத்தமுமாக இருக்குமோ ?

“இல்லை” என்பதே இதற்கான பதிலாகும்.

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற **“வாக்குத்தத்தமானது”**, முன்பு கல்தேய பட்டணமாகிய ஊரில் இருந்தபோது, தேவன் “ஆபிரகாமிடம்” செய்த வாக்குத்தத்தமாகும். இதை குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கலாம்.

**ஆதியாகமம் 12 : 1 – 3**

**“கர்த்தர் ஆபிராமை நோக்கி நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான்**

**உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ, நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."**

ஆம், இதுவே அந்த வாக்குத்தத்தம்.

ஆபிரகாமிடம் **"அவருடைய தேசத்தையும், இனத்தையும், தகப்பனுடைய வீட்டையும் விட்டு புறப்பட வேண்டும்"** என்று கேட்கப்பட்டதை அவர் நிறைவேற்றுவதின் மூலம் பெறப் போகும் மிகப் பெரிய ஆசீர்வாதமாக பண்ணப்பட்ட வாக்குத்தத்தம் இதுவாகும்.

ஆபிரகாமின் தந்தை தேராகு மரிப்பதற்கு முன்பே இவர்களுக்கு இந்த கட்டளை கர்த்தரால் முன்மொழியப்பட்டிருக்கிறது. எனவே தேராகு, ஆபிரகாம், சாராள் மற்றும் லோத்தோடு கல்தேயருடைய பட்டணத்தை விட்டு புறப்பட்டிருக்கிறார்கள்.**(அப்.7:2-4)**

"தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், .....லோத்தையும், ...சாராயையும் அழைத்துக்கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்திற்கு புறப்பட்டான்" – **ஆதி.11:31**

உண்மையான உடன்படிக்கை செய்வதற்கு முன்னதாகவே ஆபிரகாமின் விசுவாசத்தையும், கீழ்படிதலையும் சோதிக்க அவனுக்கு முன்பாக அந்த கட்டளை வைக்கப்பட்டது. அவர்கள் அவ்வாறு வரும்போது ஆரானில் ஆபிரகாமின் தந்தை தேராகு மரித்தார்.**(ஆதி.11:32)**

ஆனாலும் ஆபிரகாம் தன்னை உடன்படிக்கைக்கு உட்படுத்திக் கொள்ளவும், பெற்ற கட்டளையை காத்துக்கொள்ளவும் அவ்விடத்தை விட்டு புறப்பட்டு கானானை சென்றடைந்தார்.

**ஆதியாகமம் 12 : 4**

**"கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான், லோத்தும் அவனோடேகூடப் போனான், ஆபிராம் ஆரானைவிட்டுப் புறப்பட்டபோது, எழுபத்தைந்து வயதுள்ளவனாயிருந்தான்."**

அதுசமயம் ஆபிரகாம் எழுபத்தைந்து வயதுடையவராய் இருந்தார்.

இது அவருடைய தகப்பன் தேராகு மரித்த சில நாட்களில் நடந்தது என்றும் வாசிக்கிறோம்.


**அப்போஸ்தலர் 7 : 4**

**"அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும் படி செய்தார்".**

ஆகையால், இந்த பாகமானது தேராகுவினுடைய மரணம் வரை கணக்கிடப்படுகிறது. இது ஆபிரகாம் தன்னுடைய ஜனத்தையும், தேசத்தையும் விட்டு வெளியேறி வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொண்ட நாளாகவும் அமைகிறது, இவ்விதமாக, வேதாகம காலக்கணக்கில் இந்த பாகம் கணக்கிடப்படுவது. ஆதியாகமம் 11-ஆம் அதிகாரத்தில் உள்ளது.

| வேத வசனம் | வயது | முதல் பிறந்தவர்கள் |
|---|---|---|
| ஆதியாகமம் 11:10 ( ஜலபிரளயத்திற்கு பின்பு) | 2 | அர்பக்சாத் |
| ஆதியாகமம் 11:12 ( அர்பக்சாத் ) | 35 | சாலா |
| ஆதியாகமம் 11:14 ( சாலா ) | 30 | ஏபேர் |
| ஆதியாகமம் 11:16 ( ஏபேர் ) | 34 | பேலேகு |
| ஆதியாகமம் 11:18 ( பேலேகு ) | 30 | ரெகூ |
| ஆதியாகமம் 11:20 ( ரெகூ ) | 32 | செரூக் |
| ஆதியாகமம் 11:22 ( செரூக் ) | 30 | நாகோர் |
| ஆதியாகமம் 11:24 ( நாகோர் ) | 29 | தேராகு |

| | | |
|---|---|---|
| ஆதியாகமம் 11:32 ( தேராகின் ஆயுசு நாட்கள் ) | 205+ | மரணம் |
| **மொத்தம்** | **427** | |



**ஜலப்பிரளயம் முதல் வாக்குத்தத்தம் வரையிலான கால அளவு 427 வருடங்கள் ஆகும்.**

## பாகம் - 3

## வாக்குத்தத்தம் முதல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது வரை



காலக்கணக்கின் இந்த பாகமானது, ஆபிராம் தன் தகப்பனுடைய மரணத்தின்போது வீட்டை விட்டு வெளியேறினது ( கடந்த பாகம்

முடிவுக்கு வந்தநிகழ்வு ) துவங்கி, நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரைக்கும் செல்கிறது.

இந்த பாகங்களுக்கு இடையிலான தொடர்பு உடையாமலிருப்பதை கவனிக்கவும்.

**சரி நியாயப்பிரமாணம் எப்பொழுது கொடுக்கப்பட்டது ?**

அநேகர் இதை சீனாய் மலையில் மோசே 10 கட்டளைகளை பெற்ற தருணமாக நினைக்கின்றனர்.

**ஆனால், அது உண்மையல்ல.**

இது இஸ்ரயேலர் எகிப்தில் உள்ள ராமசேசை விட்டு வெளியேறினதற்கு முந்தின இரவு அவர்களுக்கு கொடுக்கப்பட்ட முதல் நியாயப்பிரமாணத்தை குறிக்கிறது.

இதை பின் வரும் வசனத்தில் வாசிக்கிறோம் –

**யாத்திராகமம் 12 : 41 – 42**

**“நானூற்றுமுப்பது வருஷம் முடிந்த அன்றையத்தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது, கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், இது அவருக்கென்று முக்கியமாய் ஆசரிக்கத்தக்க ராத்திரியாயிற்று, இஸ்ரயேல் சந்ததியார் எல்லாரும் தங்கள் தலைமுறைதோறும் கர்த்தருக்கு முக்கியமாய் ஆசரிக்கவேண்டிய ராத்திரி இதுவே.”**

**பார்த்தீர்களா ?**

இது “பஸ்காவின் நியமனம்” அல்லது பஸ்காவை குறித்த நியாயப்பிரமாணமாகும்.

**இதுவே தேவன் இஸ்ரயேலர்களுக்கு கொடுத்த முதல் நியாயப்பிரமாணமாகும்.**

**இந்த காலம் எதுவரை நீடித்திருந்தது ?**

இதற்கான பதிலை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் –

**கலாத்தியர் 3 : 17**

**“ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டு தேவனால் முன் உறுதி பண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்று**

**முப்பது வருஷத்திற்குப் பின்பு உண்டான நியாயப்பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது."**

இந்த வசனம் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டதற்கும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதற்கும் இடையிலான காலம் 430 வருடங்கள் என தெளிவாக காண்பிக்கிறது.

இந்த எண்ணிக்கையை வேறொரு முறையிலும் நாம் பெறலாம். இதை பின் வரும் வசனத்தில் காண்கிறோம்.

**யாத்திராகமம் 12 : 40**

**"இஸ்ரயேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்றுமுப்பது வருஷம்"**

**இது எப்படி சாத்தியமாகும் என தோன்றுகிறதா?**

ஏனென்றால், யாக்கோபு எகிப்திற்கு வந்த போது அவரோடு எழுபது பேர் இருந்ததாக வாசிக்கிறோம் **(ஆதியாகமம் 46 : 2).**

**இப்படியிருக்க, லேவி – கோகாத் – அமராம் – மோசே (1 நாளாகமம் 6 : 1-3) ஆகிய மூன்று சந்ததிகளுக்குள்ளாக 430 வருடம் கடந்திருப்பது சாத்தியமா ?**

இந்த வசனத்தை புரிந்துகொள்ள, இதை ஆங்கிலத்தில் பார்க்கும்போது, இஸ்ரயேலர்கள் 430 வருடம் எகிப்தில் வாழ்ந்தார்கள் என்று கூறாமல், அந்த மக்கள் எகிப்தில் வாழ்ந்த கொஞ்ச காலத்தையும் சேர்த்து - மொத்தம் காலம் 430 வருஷம் என கூறுவதை கவனிக்க வேண்டும்.

**"Now the sojourning of the children of isreal, who dwelt in Egypt,(was) four hundred and thirty years" (Strong's Literal O.T.)**


**"எகிப்தில் இருந்த இஸ்ரயேல் புத்திரர் பரதேசியாய் சஞ்சரித்த காலம் 430 வருடமாகும்"**

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் அவரது மகன்கள், கானான் தேசத்தில் இருந்த போதும் தொடர்ந்து ஒரு இடத்தில் இல்லாமல் இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டே அலைந்து திரிந்து ஒரு நாடோடி வாழ்க்கையே வாழ்ந்தனர்.

**எனவே இந்த 430 வருடம் ஆபிரகாம் முதன்முதலில் கானானுக்கு வந்தபோதிலிருந்தே ஆரம்பிக்கிறது.**

மேலும், **லேவி தன் பிதாக்களின் அரையிலிருந்து கொண்டு மெல்கிசேதேக்குக்கு தசம பாகம் கொடுத்ததுபோல,** இஸ்ரவேல் மக்கள் அனைவரும் **ஆபிரகாம் - ஈசாக்கு - யாக்கோபு** போன்றவர்களுக்குள்ளாகத் தங்கியிருந்து 430 வருட வாழ்க்கையை வாழ்ந்தனர். **(எபிரெயர் 7:9,10)**

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் ஆபிரகாமின் அரையிலிருந்ததால் பிறவாதிருந்த அவர்களும் வாக்குத்தத்தத்திற்கு சுதந்தரராகி, அது நிறைவேற காத்திருந்து அலைந்து யாத்திரிகர்கள் போல இருந்தனர்.




இது, 430 வருடத்திற்குப் பின் இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு புறப்படும்போது பெற்றுக்கொண்ட முதல் நியாயப்பிரமாண கட்டளையில் முடிகிறது.

**இவ்விதமாக, வாக்குத்தத்தம் துவங்கி நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட வரையிலான கால அளவு 430 வருடங்களாகும்.**

## பாகம் - 3


# நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது முதல் தேசம் பகுக்கப்பட்டது வரை

இந்த கால பகுதியானது கடந்த பாகம் முடிவடைகிற இடத்திலிருந்து மிக சரியாக துவங்குகிறது. இது தேவன் ஒவ்வொரு காரியத்தையும் துல்லியமாக செய்வதை அருமையாக காண்பிக்கிறது.

மேலும், இந்த பாகமானது எகிப்தில் அவர்களுடைய இரவில். அதாவது பஸ்காவின் நியமனம் கடைபிடிக்கப்பட்டது முதல் கானான் தேசம் 11 கோத்திரங்களுக்கு மத்தியில் பகுக்கப்பட்டது வரையிலான காலத்தை உள்ளடக்கியுள்ளது.


**( லேவி கோத்திரத்திற்கு தேசத்தில் பங்கு தரப்படவில்லை - ஆகையால், மற்றவர்களிடமிருந்து 1/10 பங்கை (தசமபாகம்) பங்கை பெற்றனர் - எண்ணாகமம் 18 : 26 )**

இப்பாகத்திற்கான கணக்கீடு மூன்று படிகளில் அட்டவனையில் காண்பிக்கப்பட்டுள்ளபடி கொடுக்கப்படுகிறது.



| வசனம் | விளக்கம் | காலம் |
|---|---|---|
| எண்ணாகமம் 33 : 3<br><br>எண்ணாகமம் 10 : 11-13 | “முதலாம் மாதத்தின் பதினைந்தாம் தேதியிலே அவர்கள் ராமசேசை விட்டுப்புறப்பட்டார்கள். பஸ்காவுக்கு மறுநாளிலே, எகிப்தியர் எல்லாரும் பார்க்க இஸ்ரயேல் புத்திரர் பெலத்த கையுடன் புறப்பட்டார்கள்.”<br><br>“இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதம் இருபதாம் தேதியில் மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் மீதிலிருந்து உயர எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரயேல் புத்திரர் சீனாய் வனாந்தரத்திலிருந்து தங்கள் பிரயாண வரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்தில் தங்கிற்று. இப்படியே கர்த்தர் மோசேயைக் கொண்டு கட்டளையிட்டபடி முதல் பிரயாணம் பண்ணினார்கள்.”<br><br>எகிப்திலிருந்து சீனாய் மலைக்கு பிரயாணம் செய்த காலத்தைக் குறித்து இந்த வசனங்கள் மிக தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. | 40 வருடங்கள் |
| எண்ணாகமம் 14 : 33 | “உங்கள் பிள்ளைகள் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே திரிந்து நீங்கள் சோரம்போன பாதகத்தைச் சுமப்பார்கள்.”<br><br>தண்டனையாகப் பெற்ற 40 வருடங்களைப் பற்றி இந்த வசனம் குறிப்பிடுகிறது. இந்த நாற்பது வருடத்தில், ஒரு வருடம் பயணம் சென்றார்கள். | |
| யோசுவா 14 : 7 | “தேசத்தை வேவு பார்க்க கர்த்தரின் தாசனாகிய மோசே என்னைக் காதேஸ்பர்னெயாவிலிருந்து அனுப்புகிறபோது எனக்கு நாற்பது | + |

| | | |
|---|---|---|
| யோசுவா<br>14 : 10 | வயதாயிருந்தது. என் இருதயத்திலுள்ளபடியே அவருக்கு மறு செய்தி கொண்டுவந்தேன்.”<br><br>இப்போதும் இதோ கர்த்தர். சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார். இஸ்ரயேலர் வனாந்தரத்தில் சஞ்சரிகையில் கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று. இதோ இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன்.”<br><br>காலேப் கானான் தேசத்தை வேவு பார்க்க மற்ற 11 பேருடன் சென்ற போதும் அந்த தேசத்தை பங்கிட்ட போதும் உள்ள வருடங்கள் இங்கு குறிப்பிடப்படுகிறது. (எண்ணாகமம் 13 : 6)<br><br>மொத்தத்தில் இந்த காலப் பகுதி 45 வருடங்கள். இந்த 45 வருடங்கள் சீனாய் மலையில் இஸ்ரயேல் மக்களின் பிரயாணத்திலிருந்து ஆரம்பமானது. ஆகவே “தேசம் பிரிக்கப்பட்ட” காலத்தை<br>45 - 39 = 6<br>என்று கணக்கிடப்படுகிறது. | 6<br>வருடங்கள் |
| | இவ்விதமாக இந்த கால பகுதி மொத்தம் | 46<br>வருடங்கள் |



## பாகம் - 3

# நியாயாதிபதிகள் காலம்



**இது தேசம் பகுக்கப்பட்டது நிறைவேறினதற்கும் இஸ்ரயேலின் முதல் இராஜாவாக – சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டதற்கும்** இடையிலான கால பகுதியாகும். இந்த கால கட்டத்தில் தேவன் இஸ்ரயேலருக்கு – நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.

**முதல் நியாயாதிபதி யோசுவா. ( எண்ணாகமம் 27 : 22, 23 )**

இந்த நியாயாதிபதிகள் இஸ்ரயேலை வழி நடத்தின தலைவர்கள் ஆவர்.

**இவர்களில் கடைசியானவர் தீர்க்கதரிசி சாமுவேல்.**

நியாயாதிபதிகளின் காலம் எவ்வளவு வருடங்கள் நீடித்திருந்தது என்பதை பற்றின விவரங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படவில்லை. ஆனால் தேவன் பரிசுத்த ஆவியின் மூலம் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்

**அப்போஸ்தலர் 13 : 20**

**“பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷகாலமாய் சாமுவேல்**

**தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார்.”**

இங்கு “ஏறக்குறைய” என்ற வார்த்தையானது, இது ஒரு தோராயமான கணக்கீடு என்றும், துல்லியமான கணக்கீடு அல்ல என்பது போன்று தோன்றுகிறது.

ஆனால், இது குறித்து கவனமாக வாசிக்கும்பொழுது தேவன் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற 450 வருட காலமானது உண்மையிலேயே நியாயாதிபதிகளின் மிக சரியான காலம் அல்ல எனும் உண்மையை வெளிப்படுத்துகிறது.

இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள **“ஏறக்குறைய”** - என்ற வார்த்தை **“ஹோஸ்”** - **HOS** - **G5613** என்ற கிரேக்க சொல்லிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

இது **“அந்த சமயத்தில்”** அல்லது **“அந்த நேரத்தில்”** அல்லது **“போன்று”** என்று பொருள்படும்.

உதாரணத்திற்கு, இதே கிரேக்க வார்த்தை வேறு சில இடங்களில் பயன்படுத்தப்பட்ட வசனங்களை பார்க்கலாம்.

**“.....he divided their land to them by Lot. And after that he gave unto them judges *about (G5613-HOS)* the space of four hundred and fifty years, until Samuel the prophet. “ - Act.13:19,20**

## அப்போஸ்தலர் 13 : 18

**“And *about (G5613-HOS)* the time of forty years suffered he their manners in the wilderness.”**

**“நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்து,...”**

## 2 பேதுரு 3 : 8

**But, beloved, be not ignorant of this one thing, that one day is with the Lord *as (G5613-HOS)* a thousand years, and a thousand years *as (G5613-HOS)* one day.**

**“கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம்போலவும், ஆயிரம்வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற...”**

மேற்கண்ட மூன்று வசனங்களிலேயும் **"G5613 - Hos"** என்ற கிரேக்க வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கேயும் நாம் "ஏறக்குறைய" என்று பொருள் கொள்வோமானால்,



**"ஏறக்குறைய 40 வருஷகாலமாய் வனாந்தரத்தில் அவர்களை ஆதரித்தார்"** எனவும், **"கர்த்தருக்கு ஒரு நாள் ஏறக்குறைய 1000 வருஷம்போலவும், 1000 வருஷம் ஏறக்குறைய ஒரு நாள் போலவும்"** எனவும் அர்த்தம் கொள்ளவேண்டிவரும்.

**இது எப்படி தோன்றுகிறது உங்களுக்கு....**

ஆகையால் இந்த வசனம் கீழே கொடுக்கப்பட்டப்படி சரியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

**"பின்பு (G5613 – Hos) தொடர்ந்து 450 வருடகாலமாய் சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும், அவர்களுக்கு நியாயாதிபதிகளை ஏற்படுத்தி வந்தார்."**

எனவே அப்.13:19,20-ல் சொல்லப்பட்ட "ஏறக்குறைய 450 வருடங்கள்" என எடுத்துகொள்ளாமல் **சரியாக 450 வருடங்கள்** என்றே நாம் கணக்கில் கொள்ளவேண்டும்.

மேலும், இங்கு 'பின்பு" என்ற வார்த்தையை தயவு செய்து கவனிக்கவும்.

இது முந்தைய வசனம் குறிப்பிடுவது போல இந்த கால பகுதியை கணக்கிடுவது **"தேசம் பகுக்கப்பட்டதில்" துவங்குவதை** உறுதி செய்கிறது.

**அப்போஸ்தலர் 13 : 19**

**"கானான் தேசத்தில் ஏழு ஜாதிகளை அழித்து அவர்களுடைய தேசத்தை இவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டுக் கொடுத்து..."**

பார்த்தீர்களா, இங்கு தெளிவாக நியாயாதிபதிகளின் கால தொடர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது.

ஏனென்றால், நியாயாதிபதிகளின் கால பகுதிக்கு முன்னும் பின்னும் காலக்கணக்கின் அடுத்த பாகம் பின்னிப்பிணைந்திருக்கிறது.




முதல் நியாயாதிபதியாகிய **யோசுவா மோசே மூலம்** நியாயாதிபதியாக கானானுக்குள் நுழையும் முன்னரே **அபிஷேகம் பண்ணப்பட்டார்.**

அதேசமயம் **யோசுவா 14 : 10-ல்** காண்கிறபடி காலேப் இந்த வார்த்தைகளை உச்சரித்தபோது அதாவது தேசம் பகுக்கப்படுகையில் அவரே நியாயாதிபதியாக இருந்தார்.

அதுமாத்திரம் அல்ல. கடைசி நியாயாதிபதியாகிய சாமுவேல் தன்னுடைய ஸ்தானத்தில் சவுல் இஸ்ரயேலின் இராஜாவாக தனது ஆளுகையை துவங்கின பின்பு தன் மரணம் வரைக்கும் தொடர்ந்தார்.

ஆகையால் நியாயாதிபதிகளின் காலம் பின் வருமாறு காண்பிக்கப்படுகிறது.



இங்கு புள்ளியிட்ட கோடுகள் நியாயாதிபதிகளின் முழுமையான காலப் பகுதியை காண்பிக்கிறது.

இவ்விதமாக தேசம் பகுக்கப்பட்டது முதல் சவுலின் ஆளுகை துவங்குவதற்கு முன்பு சாமுவேல் நியாயம் விசாரித்த காலம் வரையிலான காலப் பகுதியை தேவன் **“பின்பு” (அப்போஸ்தலர் 13 : 20)** என்பதின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

இந்த காலப் பகுதியே வேதாகம காலக்கணக்கை கணக்கிடுவதில் தேவைப்படும் ஐந்தாவது பாகமாகும்.

நாம் சற்று முன்பு பார்த்தபடி இதை காட்டிலும் நீண்டதாக முன்னும் பின்னும் பிணைந்திருக்கும் கால பகுதியை கொண்டுள்ளது. ஆனால் அவர் **இந்த பின்னிப்பிணைந்த காலப்பகுதியை வெட்டி நமக்கு தேவையான துல்லியமான காலப்பகுதியை** தந்துள்ளார்.



**வேதாகம காலக்கணக்கிற்கு தேவைப்படுகிற நியாயாதிபதிகளின் காலங்கள் 450 வருடங்கள் ஆகும்.**

## பாகம் - 3

## இராஜாக்களின் காலம்



**இது முதலாவது இராஜாவாகிய சவுல் துவங்கி யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சிவரையிலான இராஜாக்களின் காலப்பகுதியாகும்.**

. இராஜாக்கள் மற்றும் அவர்களுடைய ஆளுகையின் வருடங்களை வரிசையாக நாம் காண்போம்.

| வசனங்கள் | ராஜாக்களின் நாமங்கள் | அரசாண்ட காலம் |
| --- | --- | --- |
| அப்போஸ்தலர் 13:21 | சவுல் | 40 வருடங்கள் |
| 1 நாளாகமம் 29:27 | தாவீது | 40 வருடங்கள் |
| 2 நாளாகமம் 9:30 | சாலொமோன் | 40 வருடங்கள் |

ஆம் சாலொமோன் இராஜாவின் மரணத்திற்கு பின்பு இஸ்ரயேல் தேசமானது
**இஸ்ரயேல் (10 கோத்திரங்கள்)** மற்றும் **யூதா (2 கோத்திரங்கள்)** என இரண்டு பாகமாக பிரிந்தது.

இந்த காலக்கணக்கில் மீதம் உள்ளவைகளை அறிந்துகொள்ள தேவனுடைய பார்வை தங்கிருந்த யூதாவின் இராஜாக்களிலிருந்து நாம் எடுப்போம். ஏனென்றால் யூதாவிலிருந்தே மேசியா எனப்பட்ட – **“சமாதான கர்த்தர்”** வருவார் என்று வாசிக்கிறோம்.
**(ஆதியாகமம் 49 : 10)**

இங்கு கீழே காண்கிற பிரகாரம் யூத இராஜாக்களின் பட்டியல் வரிசை சாலொமோனுடைய குமாரனாகிய ரெகோபேயாம் துவங்கி அவர்கள் ஆளுகையின் வருடங்களும் கொடுக்கப்பட்டுள்ளது.


| வசனங்கள் | ராஜாக்களின் நாமங்கள் | அரசாண்ட காலம் |
| --- | --- | --- |
| அப்போஸ்தலர் 13:21 | சவுல் | 40 வருடங்கள் |
| 1 நாளாகமம் 29:27 | தாவீது | 40 வருடங்கள் |
| 2 நாளாகமம் 9:30 | சாலொமோன் | 40 வருடங்கள் |

| | | |
|---|---|---|
| 2 நாளாகமம் 12:13 | ரெகோபெயாம் | 17 வருடங்கள் |
| 2 நாளாகமம் 13:2 | அபியா | 3 வருடங்கள் |
| 2 நாளாகமம் 16:13 | ஆசா | 41 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 22:42 | யோசபாத் | 25 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 8:17 | யோராம் | 8 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 8:26 | அகசியா | 1 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 11:3 | அத்தாலியாள் | 6 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 12:1 | யோவாஸ் | 40 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 14:2 | அமத்சியா | 29 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 15:2 | அசரியா | 52 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 15:33 | யோதாம் | 16 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 16:2 | ஆகாஸ் | 16 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 18:2 | எசேக்கியா | 29 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 21:1 | மனாசே | 55 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 21:19 | ஆமோன் | 2 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 22:1 | யோசியா | 31 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 23:31 | யோவாகாஸ் | 1/4 வருடம் |
| 2 இராஜாக்கள் 23:36 | யோயாக்கீம் | 11 வருடங்கள் |
| 2 இராஜாக்கள் 24:8 | யோயாக்கீன் | 1/4 வருடம் |
| 2 இராஜாக்கள் 24:18 | சிதேக்கியா | 11 வருடங்கள் |

**இவ்விதமாக, இராஜாக்களின் காலம் = 513 வருடங்கள்.**

தயவுடன் கவனிக்க – மிகுதியான 6 மாதங்கள் அல்லது ஒரு வருடத்தின் சிறு பகுதி போன்றவை கவனத்தில் எடுத்துகொள்ளப்படுவதில்லை.

## பாகம் - 3

## இராஜாக்களின் கால முடிவு துவங்கி கி.பி.1-ஆம் வருடம் வரை




இந்த கடைசி பாகமானது யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சியில் துவங்கி கிபி 1-ஆம் ஆண்டு வரைக்கும் எடுத்து செல்லப்படுகிறது.

வேதாகம காலக்கணக்கில் உள்ள இந்த கடைசி பாகத்தை - யூதாவின் கடைசி இராஜாவாகிய சிதேக்கியாவின் வீழ்ச்சிக்கு பிறகு சம்பவித்தவைகளை - வாசித்து அறிவோம்.

**2 நாளாகமம் 36 : 20,21**

**“பட்டயத்திற்குத் தப்பின மீதியானவர்களை அவன் பாபிலோனுக்குச் சிறை பிடித்துப்போனான்....”**

**“....தேசம் தன்னுடைய ஓய்வு வருஷங்களை இரம்மியமாய் அநுபவித்துத் தீருமட்டும் அது எழுபது வருஷம் முடியும்மட்டும் ஓய்ந்திருந்தது.”**

**ஆம், பாபிலோனில் இஸ்ரயேலர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த காலம் 70 வருடங்களாகும்.**

அதற்கு பின்பு. பெர்சியாவின் இராஜாவாகிய – கோரேஸ் இராஜா ஆளுகைக்கு வந்த முதலாம் வருடத்தில் ஜனங்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

**2 நாளாகமம் 36 : 22,23**

**"எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறும்படி பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவினதினாலே அவன் பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளி யூதாவிலுள்ள எருசலேமிலே தமக்கு ஆலயத்தைக் கட்டுவிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்."**

கோரேஸ் இராஜா ஆளுகைக்கு வந்த **முதலாம் வருடம் உலக சரித்திரத்தில் அனைவரும் அறிந்து கி.மு** 536 என்று பதிவு செய்யப்பட்டிருக்கிற வருடமாகும்.

**ஆம், தேவன் நம்மை தம்முடைய கரம் கொண்டு அவருடைய வார்த்தைகளின் மூலம், உலக சரித்திரத்தில் நம்பத் தகுந்த காலக்கணக்கின் நிச்சயிக்கப்பட்ட வருடத்தை நாம் அறியும் மட்டும் நம்மை வழிநடத்தியிருக்கிறார்.**

இது ஒருவர் தான் அறியாத இடத்திற்கு நம்மை வழிநடத்த கேட்கும்பொழுது நாம் அவர் அறிந்திருக்கிற இடம் மட்டும் வழி நடத்திய பின்பு அவருடைய போக்கில் எப்படி அனுமதிப்போமோ அதுபோல இருக்கிறது.



ஏனென்றால் இதற்கு பின்பு அவர் தாமாக அறிந்திருக்கிற பாதையில் முன்னேறிச் செல்ல முடியும் என்பதினால் ஆகும்.

ஆம், இன்று நமக்கு தேவன் அது போன்றே செய்திருக்கிறார்.

இவ்விதமாக, வேதாகம காலக்கணக்கில் கிபி 1 வரையிலான கடைசி பாகத்தின் கால அளவு

**70 + 536 = 606** வருடங்கள் ஆகும்.

முடிவாக, ஆதாமின் சிருஷ்டிப்பிலிருந்து கிபி 1 – ஆம் ஆண்டு ஜனவரி 1 –ஆம் தேதி வரையிலான வருடங்களின் கூட்டுத் தொகை பின்வருமாறு காணப்படுகிறது.


**1656 + 427 + 430 + 46 + 450 + 513 + 606 = 4128**
**வருடங்கள்**



**இவ்விதமாக ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட மிக சரியான ஆண்டு கிமு 4128 என்று அறிகிறோம்.**

நாம் கவனிக்கவேண்டிய வேறொரு காரியம், கிமு என்ற காலக் கட்டத்தில் கடைசி வருடமாகிய கிமு 1 –டிசம்பர் 31 –ஆம் தேதிக்கு மறுநாள் கிபி 1 –ஜனவரி 1 – ஆம் தேதி ஆகும்.

இங்கு கிமு மற்றும் கிபி ஆகிய இந்த இரு காலக்கட்டங்களை பிரிக்கிற “புஜ்ஜிய” வருடம் என்று ஏதும் இல்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.




இவ்விதமாக. “கர்த்தருடைய புத்தகமாகிய” – வேதாகமத்தில் தொடர்பு அற்றுப் போகாத 50 வசனங்கள் மூலமாக ஆதாமினுடைய சிருஷ்டிப்பிலிருந்து கிபி 1-ஆம் ஆண்டு வரை கடந்து வந்த கால அளவை நாம் கண்டறிந்தோம்.

ஆம், தேவன் ஏசாயா 34 : 16 –ல் வாக்களித்தபடி அவருடைய வார்த்தைகளிலிருந்து நமக்கு இந்த துல்லியமான காலக்கோட்டை (அ) காலக்கணக்கை காண்பித்துள்ளார்.


**ஏசாயா 34 : 16**

**“கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள், இவைகளில் ஒன்றும் குறையாது. இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது, அவருடைய வாய் இதை சொல்லிற்று. அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்.”**


**ஆம், இன்று அந்த வார்த்தையானது மனிதனுக்காக தேவன் ஏற்படுத்தின “கால கடிகாரத்தை” நமக்கு வெளிப்படுத்தியுள்ளது.**

ஆகையால்,
**“....உமது வசனமே சத்தியம்....” (யோவான் 17 : 17)**
என்பதை விசுவாசிக்கிறோம்.

# ...ஆமென்...


ஆதாம் சிருஷ்டிப்பு முதல்
கிபி 1 வரை 4128 வருடங்கள்
ஆதாம் சிருஷ்டிப்பு
ஜலப்பிரளயம்
எகிப்திலிருந்து புறப்படுதல்
நியாயாதிபதிகள் காலம்
பாபிலோன் சிறையிருப்பு
1656
427
430
40+6
450
513
70
536
கி.மு.4128
வனாந்தர பயணம் & தேசம் பங்கிடுதல்
இராஜாக்கள் காலம்
கி.பி.1
ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தல்
கோரேஸின் முதலாம் வருஷம்

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST E-mail: thekingdom1_6@yahoo.com